## இயல் 6.1 - எண்கள்

பயிற்சி எண் :: 6.1.7.1.F

எண்கள் - நினைவு கூர்தல் - ஒற்றை மற்றும் இரட்டை எண்கள் - வினாடி வினா

## எண்கள் - நினைவு கூர்தல் - ஒற்றை மற்றும் இரட்டை எண்கள் - வினாடி வினா

1 ஒரு எண் இரண்டால் மீதியின்றி வகுபட்டால் அவ்வெண் ஒரு

a) ஒற்றை எண் b) இரட்டை எண் ✓ c) பூஜ்ஜியம் d) மூன்றும் சரி

2 ஒரு எண் இரண்டால் வகுபட்டு மீதி ஒன்று கிடைத்தால், அவ்வெண் ஒரு

a) ஒற்றை எண் ✓ b) இரட்டை எண் c) பூஜ்ஜியம் d) மூன்றும் தவறு

3 ஒற்றை எண்கள் கீழ்காணும் எண்களில் முடிவுறும்.

a) 1,2,3,4,5 b) 0,2,4,6,8 c) 1,3,5,7,9 ✓ d) 4,5,6,7,8

4 இரட்டை எண்கள் கீழ்காணும் எண்களில் முடிவுறும்.

a) 1,3,5,7,9 b) 1,2,3,4,5 c) 4,5,6,7,8 d) 0,2,4,6,8 ✓

5 முழு எண்களில், ஒற்றை எண்களும் இரட்டை எண்களும் அடுத்தடுத்து வரும்.

a) தவறு b) சரி ✓

6 ஒரு ஒற்றை எண்ணின் முன்னியும் தொடரியும் இரட்டை எண்ணாகவே அமையும்.

a) சரி ✓ b) தவறு

7 ஒரு இரட்டை எண்ணின் முன்னியும் தொடரியும் ஒற்றை எண்ணாகவே அமையும்.

a) தவறு b) சரி ✓

8 ஒரு இரட்டை எண்ணையும் வேறு ஒரு இரட்டை எண்ணையும் பெருக்கினால் கிடைக்கும் விடை ஒரு இரட்டை எண்ணாகவே அமையும்.

a) சரி ✓ b) தவறு

9 ஒரு ஒற்றை எண்ணையும் வேறு ஒரு ஒற்றை எண்ணையும் பெருக்கினால் கிடைக்கும் விடை ஒரு இரட்டை எண்ணாகவே அமையும்.

a) சரி b) தவறு ✓

10 ஒரு ஒற்றை எண்ணையும் வேறு ஒரு இரட்டை எண்ணையும் பெருக்கினால் கிடைக்கும் விடை ஒரு ஒற்றை எண்ணாகவே அமையும்.

a) சரி b) தவறு ✓

11 ஒரு இரட்டை எண்ணையும் வேறு ஒரு இரட்டை எண்ணையும் கூட்டினால் கிடைக்கும் விடை ஒரு இரட்டை எண்ணாகவே அமையும்.

a) சரி ✓ b) தவறு

12 ஒரு ஒற்றை எண்ணையும் வேறு ஒரு ஒற்றை எண்ணையும் கூட்டினால் கிடைக்கும் விடை ஒரு இரட்டை எண்ணாகவே அமையும்.

a) தவறு b) சரி ✓

13 ஒரு ஒற்றை எண்ணையும் வேறு ஒரு இரட்டை எண்ணையும் கூட்டினால் கிடைக்கும் விடை ஒரு ஒற்றை எண்ணாகவே அமையும்.

a) சரி ✓ b) தவறு

Sum & solution prepared on Wednesday 27th October, 2021 :: 05:34 Hrs.
All rights related to content above such as problem creation, solution, voice over, Video creation are reserved to
V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, CBE - 641 046, INDIA. Regd :: 4/16/2020 dt. January 31, 2020.